**யட்டியாந்தோட்டை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டியாந்தோட்டை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் எதிர்வரும் வருடங்களுக்கான ரூபா 230,626 தொகையான ஆதன வரி, வருமானக் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கடன்பட்டோர் மற்றும் முற்பணமாகக் கிடைத்த வருமானம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 31,512 தொகை, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 7,878 தொகை மற்றும் அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பிலிருந்து ரூபா 159,067 தொகை செலவினக் குறியீடுகளில் செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் மிகை ரூபா 198,457 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 3,215,029 முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னர் கிடைத்த கடை வாடகை ரூபா 7,400 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையால் முற்பணமாகக் கிடைத்த வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 17 கழிவுப்பொருள் பாத்திரங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 31,875 தொகை மூலதன செலவின விடயக் குறியீட்டில் செலவு வைக்கப்பட்டமையால் மூலதனச் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பல்வேறு திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 15 வேலைகளின் பெறுமதி ரூபா 6,706,234 தொகை 2017 ஆம் ஆண்டின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிஏற்பாடு கிடைத்த ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்பு முதலீடு ரூபா 75,700 தொகை நிதிக்கூற்றுக்களில் முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,219,744 ஆக இருந்த போதிலும், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,305,189 ஆனமையால் ரூபா 6,914,555 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துக்களின் பெறுமதிக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்குமான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 13,320 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

தொங்கல் கணக்கில் பல வருட காலம் முதல் காணப்பட்ட ரூபா 65,621 தொகையான செலவு மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 5,699,626 ஆகும்.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெமபர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 585,438 ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 67 மற்றும் 68 ஆம் பிரிவுகள் | - | 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 148 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 13 இற்காக மாத்திரம் தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | 48,000 | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 12 வியாபார நிறுவனங்களால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமையின் அடிப்படையில் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,042,506 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,910,095 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,346,356 | 4,346,356 | 3,779,165 | 884,801 | 4,238,510 | 4,238,510 | 3,842,178 | 1,204,113 |
| வாடகை | 4,391,785 | 4,391,785 | 4,177,122 | 77,240 | 3,771,695 | 3,996,695 | 4,124,220 | 111,983 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 720,000 | 720,000 | 1,107,518 | - | 695,000 | 695,000 | 944,947 | - |
| ஏனைய வருமானம் | 12,829,200 | 12,829,200 | 4,188,623 | 17,415,000 | 11,708,560 | 11,708,560 | 3,074,284 | 18,080,000 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது வீதவரியும் வரியும், வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் முறையே 87 சதவீதம், 95 சதவீதம், 154 சதவீதம் மற்றும் 33 சதவீதமாக இருந்தன.

**2.2.3 வீதவரியும் வரியும்**

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏதாவது ஆதனவரி அல்லது ஏக்கர் வரியொன்று அறவிடப்படாமை தொடர்பாக அந்த வரியை அறவிடுவதற்குள்ள இடத்தின் உரிமையாளரின் ஆதனங்களை தடை செய்து விற்பனை செய்தல் அல்லது பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் காணி உரிமையாளர் மற்றும் 44 ஆதன வரி / ஏக்கர் வரிஇடங்களிலிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடாதுள்ள ரூபா 113,851 தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டு முதல் ஆதன வரி அறவிடப்பட்டிருந்ததுடன் நாளதுவரையாக ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் அனுமதிப்பத்திரக் கட்டணம், கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி செலுத்த வேண்டிய இடங்கள் தொடர்பாக முறையான ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், கட்டண அறவிடலின் பிரகாரம் வருமானப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டண பெறுவனவு பதிவேடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 42 நிறுவனங்களிலிருந்து ரூபா 32,900 தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 04 வியாபாரங்கள் வியாபார அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 வாடகை**

--------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் யட்டியாந்தோட்டை பிரதேச சபை புதிய பிரதேச சபையாக கூட்டிணைக்கப்பட்டிருந்த போதிலும், பொதுச் சந்தைத் தொகுதியில் கடை உரிமையாளர்களுடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. 1986 ஆம் ஆண்டிற்கும் 1988 ஆம் ஆண்டிற்குமிடையிலான காலப்பகுதியில் கேகாலை அபிவிருத்தி சபை என்ற பெயரில் வாடகை உரிமையாளர்களுக்கிடையே உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. வாடகை

உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சபைக்கு பெறக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) யட்டியாந்தோட்டை பேரூந்து நிலையத்தில் அமைந்துள்ள 08 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக 2011 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் செல்லுபடிக் காலம் ஒரு வருடத்திற்கு வரையறுக்கப்பட்ட போதிலும், உடன்படிக்கைகளின் செல்லுபடிக் காலத்தை விஞ்சி 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும், புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

**விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மீளாய்வாண்டில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 03 அறிவித்தல் பதாதைகளுக்காக கிடைக்க வேண்டிய கட்டணம் ரூபா 37,200 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 9,832,683 மற்றும் ரூபா 4,699,711 ஆக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பந்தியின் பிரிவின் கீழ் 12 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 06 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) அமுல்படுத்தப்படாத இலக்குகள்**

சபரகமுவ மாகாண சபையின் பிரதம அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் பிரதேச அபிவிருத்தித் திட்டம் 2016 இன் கீழ் நிறைவேற்ற வேண்டிய பெறுமதி ரூபா 300,859 தொகையான 02 வேலைகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கூட்டுப்பசளை உற்பத்தி செய்ததன் பின்னர் எஞ்சுகின்ற பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்ற உக்காத கழிவுப்பொருட்கள் செயற்திட்ட நிலத்தில் குவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீள்சுழற்சி திட்ட முறைமையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பக்கச் சுவர் காணப்படாமையினால் அவ்விடத்திற்கு வெளியேயுள்ள காணிகளில் கழிவுகள் வழிந்தோடிச் செல்வதால் சூழல் பிரச்சினைகள் தோன்றும் அபாயம் காணப்பட்டது.

(iii) கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக நிலையான நீர் வழங்குதல் காணப்படாதிருந்ததுடன் பவுசர் மூலம் நீர் வழங்குவதன் காரணமாக உர உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்களின் நீர்த் தேவையினை பூர்த்தி செய்யும் போது பிரச்சினைகளுடனான நிலையொன்று தோற்றம் பெற்றிருந்தது.

(iv) இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் குவிக்கப்பட்டிருந்ததுடன் அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சூழல் பிரச்சினைகள்**

சபையினால் 2016 யூலை மாதத்தின் பின்னர் கலிபவுசர் சேவை வழங்கப்படாதிருந்ததுடன் கழிபவுசரில் கழிவுப்பொருட்கள்களை அகற்றுவதற்காக விண்ணப்பதாரருக்கு சொந்தமாக தனிப்பட்ட இடமொன்று காணப்படுமாயின் மாத்திரம் இந்த சேவை வழங்கப்பட்டிருந்தது. பட்டியாந்தோட்டை நகர ஆதனவரி எல்லையில் 2,028 ஆதன வரி உரித்தாளிகள் இருந்ததுடன் கலிபவுசர் சேவையினை வழங்குவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றை திட்டமிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

சபையில் சேவையில் ஈடுபட்டிருந்து பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற 41 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய 05 வருடங்களை விட பழைய ஊழியர் கடன் மீதியான ரூபா 175,155 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 3,390,540 பெறுமதியான 05 வாகனங்கள் மற்றும் 01 உதிரிப்பாகம் என்பன 03 வருடம் முதல் 08 வருடங்கள் வரையிலான காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.3.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 36,672,420 பெறுமதியான 05 வாகனங்கள் மற்றும் சபரகமுவ மாகாண சபையின் மூலம் வழங்கப்பட்ட 05 வாகனங்களின் உரித்து என்பவற்றைச் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 பெறுகைகள்**

**3.4.1 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான தேறிய நிதிஏற்பாட்டில் 40 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 2,461,084 நிதிஏற்பாட்டில் 100 சதவீதமும், 22 செலவின விடயங்களில் கூட்டுமொத்தமான ரூபா 2,531,552 நிதிஏற்பாட்டில் 50 சதவீதமும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,992,636 நிதிஏற்பாடு சபை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) தொங்கல் கணக்கு தீர்க்கப்படாமை |
| | (ii) காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்காமை |
| | (iii) நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | நாட்குறிப்புப் பதிவுகளுக்காக விளக்கான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமை |
| | | (v) | வருமானமும் செலவினமும் மற்றும் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறைவாகவும், அதிகரித்தல் கணக்கீடு செய்யப்பட்டமை |
| | | (vi) | பேரேட்டுக் கணக்கு மீதிகள் பதிவேடுகளுடன் இணங்காமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுபாடு | | செலவினக் குறியீட்டிற்காக தேறிய நிதிஏற்பாட்டில் கவனத்தில் கொள்ளக் கூடிய சதவீதமொன்று சேமிக்கப்பட்டமை. |
| (இ) | வருமான நிர்வாகம் | | வாடகை உரிய காலத்தில் மதிப்பீடு செய்யப்படாமை |
| (ஈ) | வாகனப் பயன்பாடு | (i) | நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை |
| | | (ii) | வாகன சம்பவக் குறிப்புப் புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டாமை. |
| | | (iii) | செயற்பாடற்ற மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கான வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை |